A. Vennila - Kumbakonam - Thanjavur

Reg.No. | | | | | | |

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2020

காலம்:3.00மணி வகுப்பு - 11 மதிப்பெண்கள்: 90

## பொதுத்தமிழ்

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. (கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்படையதைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 14 x 1 = 14

1. இரண்டு கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றுவித்தவர்
அ) நாயக்க மன்னர் ஆ) பல்லவர் இ) குலோத்துங்கன் ஈ) இராசராசன்
2. சரியான விடையைப் பொருத்துக.
அ) வீழருவி - 1) உவமைத்தொகை
ஆ) குகைமுகம் - 2) பண்புத்தொகை
இ) பேரழகு - 3) வினைத்தொகை
ஈ) புல்புழு - 4) எண்ணும்மை
- 5) உம்மைத்தொகை
அ) அ-2, ஆ-4, இ-5, ஈ-3 ஆ) அ-4, ஆ-3, இ-2, ஈ-1
இ) அ-5, ஆ-2, இ-1, ஈ-4 ஈ) அ-3, ஆ-1, இ-2, ஈ-5
3. நாட்குறிப்பை ஆங்கிலத்தில் .......... என அழைப்பர்.
அ) டைஸ் ஆ) டைரியம் இ) டைரி ஈ) எபிமரிடிஸ்
4. தொல்காப்பியத்துள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 27 இ) 3 ஈ) 13
5. `உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே` என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ) பயனோடு ஆ) அணிந்துரை இ) நன்னூல் ஈ) முன்னுரை
6. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
7. மலை மற்றும் மலைசார்ந்த பகுதி ......... எனக் குறித்தது அகத்தினை இயல்
அ) பாலை ஆ) முல்லை இ) குறிஞ்சி ஈ) மருதம்
8. ஏழு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் .......... என்பதாகும்.
அ) ஓலை ஆ) நூல் இ) தாள் ஈ) எழுத்தாணி
9. தலைவியின் இல்லறப் பாங்கை நற்றாயிடம் பாராட்டியது
அ) தலைவன் ஆ) செவிலித்தாய் இ) தந்தை ஈ) தோழி
10. `ஆத்மாநாம்` இயற்பெயர் யாது?
அ) ரங்கராஜன் ஆ) மதுசூதனன் இ) ராசேந்திரன் ஈ) மீனாட்சி
11. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற தாகூரின் கீதாஞ்சலி என்பது ..........
அ) நாடக நூல் ஆ) நாவல் இ) கவிதைநூல் ஈ) சிறுகதை நூல்
12. நன்னாடு என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) தொழிற்பெயர் ஈ) உரிச்சொல்
13. தவறான விடையைக் கண்டறிக.
பாடாண் திணை என்பது
அ) கைக்கிளைக்குப் புறனானது ஆ) ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பாடுவது
இ) மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மைகளைக் கூறுவது
ஈ) ஆண்மகனின் போர்ச் சிறப்பை மட்டும் பாடுவது
14. Referee என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) இளையோர் ஆ) நடுவர் இ) சுற்றறிக்கை ஈ) வலிமையானவர்

### பகுதி - II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும். 12 x 2 = 24

#### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடைதருக.

15. பாயிரம் எதற்கு உதவுகிறது?

16. தொழுஉரம் என்றால் என்ன?
17. 'வரை' என்னும் சொல்வழக்குக் குறித்து அறியப்படுவது யாது?
18. கல்வியின் நோக்கம் யாது?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.**

19. மதீனா நகரம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
20. பாரதிதாசன் இயற்றிய காப்பியங்கள் யாவை?
21. கற்றளிக் கோயில்கள் சிலவற்றைக் கூறுக.

பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) புதுமலர் ஆ) நீரோடை
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அடைந்த ஆ) காண்பார்
24. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
அ) மயில் கூவ குயில் அகவியது
ஆ) தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்
25. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.
அ) கொல்லை கிணற்றிலே வெண்ணிலா பந்து
ஆ) எள்ளு செடியிலே வெள்ளைப்பூ பூத்தது.
26. 'காரன்' விகுதி பெற்ற ஆக்கப்பெயர்கள் சில கூறு.
27. செய்யுள் உறுப்புகள் எவை?
28. இலக்கணக் குறிப்பு வரைக.
அ) வாழ்க ஆ) விரிகதிர்
29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது. நன்மை செய்யக்கூடாது உதவியை
30. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து வாக்கியம் அமைக்கவும்.
வழி, வலி

பகுதி – III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **7 x 4 = 28**

பகுதி – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. நற்றிணை – குறிப்பெழுதுக.
32. தஞ்சைப் பெரிய கோவில் விமான அமைப்பின் சிறப்பினை விளக்குக.
33. சேரநாடு, செல்வவளம் மிக்கது என்று கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
34. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

பகுதி – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. 'கேள்வி' என்னும் தலைப்பில் 'ஆத்மகாம்' உணர்த்தும் செய்திகளை எழுதுக.
36. தாகூர், குறித்து நீ அறிவன யாவை?
37. க.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
38. நாங்கூழ்ப் புழுவின் உழைப்புக் குறித்து நடராசன் கூறுவன யாவை?

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

குறிப்பு காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 42க்கு பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள், எவையேனும் நான்கினைக் கூறுக. **(அல்லது)**
வேற்றுமையை அணியை விளக்குக.
40. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்பு படுத்தி எழுதுக.
தன்கையே தனக்குதவி (அல்லது) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்கள் மட்டும்)

சுதந்திரம் தருகின்ற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம் தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதழ்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால் தான்
நிதம் தரும் துயர்களை நிமிர்ந்து நின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும் – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை

42. தமிழாக்கம் தருக.

அ) Indian people, always dislike violence.
ஆ) Well began is half done.
இ) Make hay while the sunshines.
ஈ) Knowledge is power.

42. காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.

பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள் நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார். இளமையில் புலவரேறு பழநி தண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று வெண்பா, கலித்துறை இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கி விட்டார். நடிப்பாற்றலால் புகழ் அடைந்தபோது அவருடைய வயது 24.

சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி. கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறிவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவை மிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத் துறைக் கலைஞர்கள் 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

வினாக்கள்

1) இளமையில் யாரிடம் சங்கரதாசு சுவாமிகள் தமிழறிவைப் பெற்றார்?
2) நடிப்பாற்றலால் புகழ் அடைந்த போது அவரின் வயது என்ன?
3) சங்கரதாசு சுவாமிகள் உருவாக்கிய சபையின் பெயர் என்ன?
4) நாடகத் துறை கலைஞர்கள் அவரை எவ்வாறு போற்றுகின்றனர்?

43. பொருண்மொழிக் காஞ்சித் துறையை விளக்குக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18**

44. அ) நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச் சிந்து உள்ளது – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல் வழி மதிப்பீடு செய்க. **(அல்லது)**

ஆ) மாணவர் பாடம் கேட்கும் முறைமை குறித்துத் தொல்காப்பியம் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை, உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க **(அல்லது)**

ஆ) புலம் பெயர்ந்த வலியையும் வாழ்வையும் ஆறாம் திணை வாயிலாக நீவிர் அறிவதைத் தொகுத்து எழுதுக.

46. அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மை' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

47. அ) 'ஆக்கியோன் பெயரே' எனத் தொடங்கும் பாடலை எழுதுக. **1 x 4 = 4**

ஆ) 'பெரிது' என முடியும் குறட்பா **1 x 2 = 2**